

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.4.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் சந்தித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தெற்கு இரயில்வே ஆலோசனைக் குழு தலைவராக நியமிக்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### போப் பிரான்சிஸ் இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில்

## அமைச்சர் சா.மு.நாசர் - இனிகோ இருதயராஜ் பங்கேற்பர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஏப்.23-

**கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் பங்கேற்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில், பரிவோடும், முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மறைந்த போப் பிரான்சிஸ் அவர்களுக்கு நேற்று (22.4.2025) இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த - மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல என்னும்

## முதலமைச்சர் பட்னாவிஸின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறதா?

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஏப்.23-

தேசிய கல்விக் கொள்கையின் கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியம் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் அம்மாநில முதலமைச்சர் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா என்று சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மகாராஷ்டிரத்தில் இந்தியைக் கட்டாய மூன்றாவது மொழியாகத் திணித்ததற்காகக் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மகாராஷ்டிர மாநிலத்தில் மராட்டி மட்டுமே கட்டாய மொழி எனக் கூறுகிறார் அம்மாநில முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அவர்கள். இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிப்பதற்கு எதிராக, மிகப் பரவலாக மக்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்ததன் விளைவாக உருவான நடுக்கத்தின் வெளிப்பாடு தான் அவரது இந்தப் பேட்டி.**

**இந்நிலையில், பிரதமர் அவர்களும் ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களும் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்திட வேண்டும்:**

**தேசிய கல்விக் கொள்கையின்கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா?**

**எனில், தேசிய கல்விக் கொள்கையின்படி, மூன்றாவது மொழியைப் பயிற்றுவிப்பது கட்டாயமல்ல என்று தெளிவான வழிகாட்டுதலை ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழங்குமா?**

**மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அநியாயமாக தமிழ்நாட்டுக்குத் தராமல் நிறுத்தி வைத்திருக்கும் 2,152 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில்-

## 12 ஆலைகளில் இணைமின் திட்டம் செயல்பட்டு வருகிறது!

### சட்டப்பேரவையில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சென்னை, ஏப். 23-

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் போது அ.தி.மு.க. உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி பேசும்போது இணைமின் திட்டம் நிறைவேற்றப் படவில்லை என்று கூறினார்.**

இதற்கு பதிலளித்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:-

உறுப்பினர் ஆ.கோவிந்தசாமி பேசும்போது, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 10 கோரிக்கைகளை வைத்ததாகத் தெரிவித்திருக்கிறார். அதில், இணை மின் திட்டம் நிறைவேறவில்லை; அந்தப் பணி முழுமையாக நிறைவேறவில்லை என்று சொல்லியிருக்கிறார். இணை மின் திட்டத்தைப் பொறுத்தவரை, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், 12 ஆலைகளில் இணை மின் திட்டம் செயல்பட்டு வருகிறது. அவற்றில் 7 ஆலைகள், செங்கல்ராயன் ஆலை, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை, அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை, தருமபுரி ஆலை மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய 7 ஆலைகளில் இணை மின் திட்டப் பணி முழுமையாக முடிக்கப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்ட சுப்பிரமணிய சிவா ஆலையிலும் 45 சதவிகிதப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை என்ற ஒரு தவறான தகவலை அவைக்குத் தந்திருக்கிறார்.

இன்னும் 5 ஆலைகளிலே முடிய வேண்டியிருக்கிறது. அது சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி1, கள்ளக்குறிச்சி2, சுப்பிரமணிய சிவா தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை போன்ற ஆலைகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக இணை மின் திட்ட பணிகள் நிறைவுபெற இருக்கிறது என்பதைத் தகவலுக்காகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதிலளித்து பேசினார்.

### ராஜபாளையம் தொகுதி

## கிருஷ்ணாபுரம் ஊராட்சி துணை சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?

### சட்டப்பேரவையில் எஸ். தங்கபாண்டியன் கேள்வி!



சென்னை, ஏப்.23-

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இராஜபாளையம் தொகுதி உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், கிருஷ்ணாபுரம் ஊராட்சி - மலையாபுரம் துணை சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எஸ். தங்கப்பாண்டியன்:** ராஜபாளையம் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, மலையாபுரம் துணை சுகாதார நிலையத். தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** ராஜபாளையம் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சிக் குட்பட்ட பி.எஸ்.கே. மலையாபுரம் கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த துணை சுகாதார நிலையம் ஜமீன் கொல்லங்கொண்டான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்டதாகும். இக்கிராம மக்கள் eSanjeevani முறையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். பி.எஸ்.கே. மலையாபுரம் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் மாடசாமி கோவில் தெரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், 2 கி.மீ. தொலைவில் ராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனையும், 5 கி.மீ. தொலைவில் ராஜபாளையம் அரசு மருத்துவமனையும், தற்போது அது அரசு மாவட்ட தலைமை மருத்துவனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்ற காரணங்களினால், இந்தத் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் சாத்திக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ். தங்கப்பாண்டியன்:** ராஜபாளையம் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, பி.எஸ். கே. மலையாபுரம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு 12,169 மக்கள் தொகை இருந்தது. தற்போது 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ளதால், அப்பகுதியில் வசிக்கும் கிராம மக்களின் நலனைக் கருதி, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தவும், அதேபோன்று பி.எஸ். கே. மலையாபுரம் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக அறிவித்து, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளதால், மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கருவிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், lab technician நியமனம் செய்து, இராஜபாளையம் பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு எப்போது வரும் .

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் புதிதாக ஒரு 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு ஒப்புதல் தந்து, 1,018 கோடி ரூபாய் நிதி ஆதாரத்தையும் தந்து அந்தப் பணிகள் எல்லாம் தற்போது நிறைவுறும் தருவாயில் இருக்கிறது.

இந்த பணிகள் முடிந்த உடன் மன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் 40 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளும் நிறைவுறும் தருவாயில் இருக்கிறது. மிக விரைவில் அதற்கான மருத்துவ உபகரணங்களும் பொருத்தப்பட்டு, மருத்துவப் பணியாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் புதிதாக 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் ஒரே நேரத்தில் திறந்து வைக்கப்படும் என்கின்ற செய்தியை தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.தங்கப்பாண்டியன்:** முதலமைச்சர் அவர்களின் முத்தானத் திட்டம் முதலமைச்சர் மருந்தகம்— செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகத்தில் குழந்தைகளுக்குத் தேவையான சளி, இருமல், காய்ச்சல் போன்ற நோய்களுக்கான tonic மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்துகளும், அதே போன்று சர்க்கரை நோய், இருதய நோய், நோய் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தனியார் மருத்துவமனையில் மருந்துகளை அதிக ளவில் விலை கொடுத்து வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஏழை பொது மக்கள் பயன்படுத்தும்விதமாக மருந்து மாத்திரைகள் தடையின்றி கிடைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் முதலமைச்சர் அவர்களின் பெயரிலே அமைந்திருப்பதால்கூட்டுறவுத் துறைமூலம் விற்பனை செய்கிறார்களென்று நீங்கள் சொல்லலாம். ஆனால், கூட்டுறவுத் துறையும், மருத்துவத் துறையும் சேர்த்து முதல்வர் அவர்களின் பெயரில் வைத்திருப்பதால், அந்த மருந்துகளின் உரிமையாளர்களைக் அழைத்துப் பேசி பொதுமக்களுக்குத் தேவையான மருந்துகள் தடையின்றி கிடைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** தமிழ்நாட்டில் ஒரு மகத்தான சாதனையாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் ஆயிரம் முதல்வர் மருந்தகங்கள் 24.2.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்த மருந்தகங்களைப் பொறுத்தவரை 206 வகையான generic medicines, அதாவது பொது மருந்துகள் இன்றைக்கு மிகப்பெரிய அளவில் விலை குறைந்த வகையில்விநியோகிக்கப்பது என்கின்ற வகையில்தான் முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய அர்ப்பணிப்பு உணர்வோடு அந்தப் பணியினைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து இருக்கிறார்கள்.

இந்த 206 generic medicines யும் தவிர்த்து வேறு வகையான மருந்துகளை அவர்களே வாங்கி விற்பனை செய்வதற்கு எந்த விதமான தடையும் இல்லை. குறிப்பாக, Horlicks போன்ற பல்வேறு பொருட்களை அவர்களேகூட வாங்கி விற்கலாம். இதுமட்டுமல்லாமல், மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல வேறு வகையான மருந்துகள் வேண்டுமென்ற கோரிக்கை எழும்பட்சத்தில் நிச்சயம் நம்முடைய TNMSC நிருவாகமும் கூட்டுறவுத் துறையும் ஒருங்கிணைந்து, கூட்டுறவுத் துறையோடு இணைந்து பேசி அவர்களுடைய தேவைக்கேற்ப TNMSC மூலம் மருந்துகள் வாங்கித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஆளுநரின் அதிகார அத்துமீறலை தடுக்க ஒரே குரலாக ஓங்கி ஒலிப்பீர்!

## மாநாட்டை - பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் புறக்கணிப்பீர்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!



தினகரன்

ஏப்ரல் 22, 2025 செவ்வாய்க்கிழமை

ஆளுநரின் அதிகார அத்துமீறல்

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பொறுப்பேற்றதில் இருந்து, மக்கள் நலனுக்கு எதிராகவும், மாநில அரசுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். மதுரையில் கடந்த வாரம் நடந்த விழாவில் கல்லூரி மாணவர்களை ஜெய் ஸ்ரீராம் என ஆளுநர் ஆர்.என்.ரவி, கோஷமிட வைத்தார். பொறுப்புமிக்க பதவியில் உள்ள ஆளுநர் ஒரு மதம் சார்ந்து பேசுவது மாணவர்களிடையே மதம் மற்றும் பிரிவினைவாதத்தை உண்டாக்கும் எனக்கூறி அனைத்து கட்சிகள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அவரை பதவி விலக வேண்டும் என வலியுறுத்தின.

இந்நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, அதிகார அத்துமீறலில் மீண்டும் ஈடுபட்டுள்ளார். கடந்த

சென்னை, ஏப்.23-

ஆளுநரின் அதிகார அத்துமீறலை தடுக்க, அவர் அழைப்பு விடுத்துள்ள மாநாட்டை, பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 22.4.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஆளுநர் ஆர்.என்.ரவி பொறுப்பேற்றதில் இருந்து, மக்கள் நலனுக்கு எதிராகவும், மாநில அரசுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். மதுரையில் கடந்த வாரம் நடந்த விழாவில் கல்லூரி மாணவர்களை ஜெய் ஸ்ரீராம் என ஆளுநர் ஆர்.என்.ரவி, கோஷமிட வைத்தார். பொறுப்புமிக்க பதவியில் உள்ள ஆளுநர் ஒரு மதம் சார்ந்து பேசுவது மாணவர்களிடையே மதம் மற்றும் பிரிவினைவாதத்தை உண்டாக்கும் எனக்கூறி அனைத்து கட்சிகள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அவரை பதவி விலக வேண்டும் என வலியுறுத்தின.

இந்நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, அதிகார அத்துமீறலில் மீண்டும் ஈடுபட்டுள்ளார். கடந்த 2022ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் துணைவேந்தர்கள் மாநாட்டை ஊட்டியில் நடத்தி வருகிறார். இந்த மாநாட்டில் மாநிலம் முழுவதும் உள்ள 48 ஒன்றிய, மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் பங்கேற்று வந்தனர். இதற்கிடையே, சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப் பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டது. பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவும் அதில் ஒன்றாகும். இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டதாக கூறி 10 மசோதாக்களும் சட்டமானதாக அரசிதழில் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. தொடர்ந்து, துணைவேந்தர்கள், பதிவாளர்கள் கூட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 16ம் தேதி சென்னையில் நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உள்ளார்.

இந்நிலையில், ஆளுநர் மாளிகை சார்பில் துணைவேந்தர்கள் வருடாந்திர மாநாடு ஊட்டியில் ஏப்ரல் 25, 26ம் தேதிகளில் நடைபெறுகிறது என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளதாக தெரிகிறது.

சமீபத்தில் தான் குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சித்து சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் இந்த மாநாட்டில் அவர் பங்கேற்கிறார் என அறிவித்திருப்பது பல்வேறு சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. அரசியலமைப்பு சட்டரீதியாக இணைவேந்தர் பொறுப்பில் உள்ள மாநில அரசின் உயர் கல்வித்துறை அமைச்சர் பங்கேற்காத துணைவேந்தர்கள் கூட்டத்தை நடத்தி, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான தாக்குதல் தளமாக பல்கலைக் கழகங்களை ஆயத்தப்படுத்தி வருகின்றார்.

இதற்கிடையில் மாநிலங்களை ஒடுக்க ஜனாதிபதி, ஆளுநர்களை ஒன்றிய அரசு தவறாக பயன்படுத்துகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாநில சட்டமன்ற அதிகாரத்தை குறைத்து, ஒன்றிய அரசின் கீழ் கொண்டு வர மோடி அரசு முயற்சிக்கிறது. மாநிலங்களின் மொழி, கலாசார பாரம்பரியத்தை அழிக்க ஒன்றிய அரசு முயற்சி செய்கிறது என கூறியுள்ளார். தொடர்ந்து தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என ஆளுநர் ஆர்.என். ரவி செயல்பட்டு வருகிறார். எனவே இந்த மாநாட்டை பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் புறக்கணிக்க வேண்டும். ஆளுநரின் அதிகார அத்துமீறலை தடுக்க தமிழர்கள் ஒரே குரலாக ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதில் மாற்று கருத்து ஏதுமில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, பாக முகவர்கள் (BL2) மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில்நடைபெற்றது. துரை.கி.சரவணன்சிறப்புரையாற்றினார். ப.அன்பரசு வரவேற்புரையாற்றினார். செ.புஷ்பராஜ், இரா.சக்கரை, தயா.இளந்திரையன், பி. தெய்வசிகாமணி, தே.முருகவேல், க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், கல்பட்டு வி.ராஜா, பா.ஜீவா, தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், என்.பஞ்சநாதன் டி.என்.ஜெ..சம்பத், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர்கள் இரா.கேசவன், ஹரிராமன், ப.அன்பரசு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் ஏற்பாட்டில் கீழ் புத்துப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி 1000நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.